சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – திட்ட நிதியை பயன்படுத்துதல் குறித்து உரிய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.1) துறை

அரசாணை (நிலை) எண்.33 நாள் 26.02.2021
சார்வரி – மாசி 14–ந்தேதி
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்கப்பட்டவை:–

(1) அரசாணை (நிலை) எண்.130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி.1) துறை, நாள் 27.07.2020.
(2) அரசாணை (நிலை) எண்.167ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.1) துறை, நாள் 21.10.2020.
(3) அரசாணை (நிலை) எண்.168 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.1) துறை நாள் 23.10.2020.

மீண்டும் படிக்க:–

(4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 45705/2020/ NEDM-2, நாள் 16.12.2020.

------

**ஆணை:**

சட்டமன்ற தொகுதிகளில் காணப்படும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதி இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் தமது சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து, இத்திட்டத்தின்கீழ் அப்பணிகளை செயல்படுத்திட பரிந்துரை செய்வார்கள் என்றும், இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும், திட்ட செயலாக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆண்டு தோறும் அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஒவ்வொரு ஆண்டும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் முன்னுரிமைப் பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்வதெற்கன ஒரு குறிப்பிட்ட தொகையை "வரையறுக்கப்பட்ட கூறு நிதி" (Tied Component) எனவும், மீதமுள்ள தொகையினை "வரையறுக்கப்படாத கூறு நிதி" (Un-Tied Component) எனவும் நிர்ணயிக்கப்படுவதில், வரையறுக்கப்பட்ட கூறு நிதித் தலைப்பின் கீழ், குறிப்பிட்ட பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்திடவும், வரையறுக்கப்படாத கூறு நிதித் தலைப்பில், குறிப்பிட்ட சில தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணியையும் சட்டமன்ற உறுப்பினர் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்படுகின்றது என்றும் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு அவ்வப்போதைய தேவை மற்றும் அவசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் சேமிப்பு நிதி மற்றும் வட்டித் தொகைகளை அடுத்தடுத்த ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்வது குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது தெளிவுரைகள் கேட்டு வருகின்றனர் எனவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட நிதியாண்டின் வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளவாறு சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரைக்கப்படும் பணிகளை செயல்படுத்திய பிறகு, மேற்கொள்ளப்பட்ட பட்டியல் செலவினத்திற்கு பிறகான சேமிப்பு நிதி மற்றும் வங்கி வட்டித் தொகைகளை மீளவும் அதே சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின்பேரில் பணிகளை செயல்படுத்துவது குறித்து மாவட்டங்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் அளித்திட வேண்டியுள்ளது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், கடந்த **9.12.2020** அன்று நடைபெற்ற தமிழ்நாடு பொதுக் கணக்குக் குழுவின் கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சேமிப்பு மற்றும் வட்டித் தொகைகளை அதே சட்டமன்ற உறுப்பினர்களால் அடுத்தடுத்த ஆண்டுகளில் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிய வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும், அதனடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஒவ்வொரு கூறுநிதி / தலைப்புகளிலும் சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரைக்கப்பட்டு பணிகளை செயல்படுத்திய பின்னர் செலவிடப்பட்ட பட்டியல் தொகை போக மீதமுள்ள சேமிப்பு நிதி மற்றும் வங்கி வட்டித் தொகை ஆகியவற்றை அடுத்தடுத்த ஆண்டுகளில் நடப்பு சட்டமன்றப் பேரவை காலத்திற்குள்ளாகவே (Legislative Assembly Tenure) சட்டமன்ற உறுப்பினர் அவரது தொகுதியில் பணிகளை பரிந்துரை செய்வது குறித்து பொதுவான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்து அரசாணை வெளியிடப்பட வேண்டியுள்ளது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் சேமிப்பு நிதி மற்றும் வங்கி வட்டித் தொகை ஆகியவற்றினை மீளவும் நடப்பு சட்டமன்றப் பேரவை காலத்திற்குள்ளாகவே, அதே சட்டமன்ற தொகுதியில் அந்த ஆண்டின் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, வரையறுக்கப்படாத கூறில் உள்ளவாறு தடை செய்யப்பட்ட பணிகள் தவிர இதர பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின்பேரில், பணிகளை செயல்படுத்திட

கீழ்வரும் நிபந்தனைகளுடன் உரிய அரசாணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:

(1) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்படும் கூறுநிதி / தலைப்புகளின்கீழ் (Components) ஒதுக்கீட்டுத் தொகை முழுமைக்கும் சட்டமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு பரிந்துரைக்கப்படும் நிதியில் பணிகளை செயல்படுத்திய பிறகு, மேற்கொள்ளப்பட்ட பட்டியல் செலவினத்திற்குப் பிறகான மீதத் தொகையாக வருவதே சேமிப்பு நிதியாகக் (Savings Fund) கருதப்பட வேண்டும்.

(2) அவ்வாறின்றி, ஒவ்வொரு கூறுநிதி / தலைப்பிலும் வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளவாறு முழுமையாக பணிகளை பரிந்துரைக்காமல் பகுதியாகவோ, முழுவதுமாகவோ நிலுவையில் உள்ள தொகையினை செலவிடப்படாத தொகையாகக் (Unspent Amount) கருதப்படுமே தவிர, சேமிப்பு நிதியாகக் கருதிட இயலாது. மேலும், அந்தந்த கூறுநிதி / தலைப்புகளில் செலவிடப்படாமல் நிலுவையாக உள்ள தொகைக்கு அதற்குரிய கூறுநிதி / தலைப்புகளின்கீழ் சட்டமன்ற உறுப்பினடமிருந்து உரிய பரிந்துரை பெற்று முழுமையாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அப்பணிகளை செயல்படுத்திய பிறகான பட்டியல் செலவினம் போக மீதத் தொகையினை சேமிப்பு நிதியாக கணக்கில் கொள்ள வேண்டும்.

(3) இது தவிர, ஒவ்வொரு ஆண்டும் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டக் கணக்குகளில் வங்கியினால் அளிக்கப்படும் வட்டித் தொகையையும் (Interest amount) கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

(4) இந்த நடைமுறை, குறிப்பிட்ட ஒவ்வொரு சட்டமன்றப் பேரவைக் காலத்திற்குள்ளாகவே (Legislative Assembly Tenure) அனுமதிக்கப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவைக் காலம் முடிவுற்ற பின்னர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டக் கணக்குகளில் உள்ள செலவிடப்படாத நிதி, சேமிப்பு மற்றும் வங்கி வட்டித் தொகை யாவும் அடுத்து வரும் சட்டமன்றப் பேரவைக்கான உறுப்பினர்கள் திட்ட பணிகளுக்காகப் பயன்படுத்திட இயலாது. அத்தொகை முழுமையாக அரசு கணக்கில் உரிய தலைப்பின்கீழ் மீள செலுத்தப்பட வேண்டும்.

மேலும், இது குறித்து பின்னர் தேவையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்கள் செய்து கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படலாம்.

6. மேற்கண்ட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து அதன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் திட்ட பணிகளுக்காக செலவிடப்பட்டது போக மீதமுள்ள சேமிப்பு நிதி மற்றும் வங்கி வட்டித் தொகை ஆகியவற்றினை மீளவும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நடப்பு சட்டமன்றப் பேரவை காலத்திற்குள்ளாகவே (Legislative Assembly Tenure) சட்டமன்ற உறுப்பினரின் அதே சட்டமன்ற தொகுதியில் அந்த ஆண்டின் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, வரையறுக்கப்படாத கூறில் உள்ளவாறு தடை செய்யப்பட்ட பணிகள் தவிர, இதர பணிகளுக்கு அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின் பேரில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், பணிகளை செயல்படுத்துவதற்கு ஆணையிடுகிறது:

(1) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்படும் கூறுநிதி / தலைப்புகளின்கீழ் (Components) ஒதுக்கீட்டுத் தொகை முழுமைக்கும் சட்டமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு பரிந்துரைக்கப்படும் நிதியில் பணிகளை செயல்படுத்திய பிறகு, மேற்கொள்ளப்பட்ட பட்டியல் செலவினத்திற்குப் பிறகான மீதத் தொகையாக வருவதே சேமிப்பு நிதியாகக் (Savings Fund) கருதப்பட வேண்டும்;

(2) ஒவ்வொரு கூறுநிதி / தலைப்பிலும் வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளவாறு முழுமையாக பணிகளை பரிந்துரைக்காமல் பகுதியாகவோ, முழுவதுமாகவோ நிலுவையில் உள்ள தொகையினை செலவிடப்படாத தொகையாகக் (Unspent Amount) கருதப்பட வேண்டும். அவ்வாறின்றி சேமிப்பு நிதியாகக் கருதிட இயலாது. மேலும், அந்தந்த கூறுநிதி / தலைப்புகளில் செலவிடப்படாமல் நிலுவையாக உள்ள தொகைக்கு அதற்குரிய கூறுநிதி / தலைப்புகளின்கீழ் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து உரிய பரிந்துரை பெற்று முழுமையாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அப்பணிகளை செயல்படுத்திய பிறகான பட்டியல் செலவினம் போக மீதத் தொகையினை சேமிப்பு நிதியாக கணக்கில் கொள்ள வேண்டும்;

(3) ஒவ்வொரு ஆண்டும் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டக் கணக்குகளில் வங்கியினால் அளிக்கப்படும் வட்டித் தொகையையும் (Interest amount) கணக்கில் கொள்ளப்பட வேண்டும்;

(4) இந்த நடைமுறை, குறிப்பிட்ட ஒவ்வொரு சட்டமன்றப் பேரவைக் காலத்திற்குள்ளாகவே (Legislative Assembly Tenure) அனுமதிக்கப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவைக் காலம் முடிவுற்ற பின்னர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டக் கணக்குகளில் உள்ள செலவிடப்படாத நிதி, சேமிப்பு மற்றும் வங்கி வட்டித் தொகை யாவும் அடுத்து வரும் சட்டமன்றப் பேரவைக்கான உறுப்பினர்கள் திட்ட பணிகளுக்காகப் பயன்படுத்திட இயலாது. அத்தொகை முழுமையாக அரசு கணக்கில் உரிய தலைப்பின்கீழ் மீள செலுத்தப்பட வேண்டும்;

(5) மேலும், இது குறித்து பின்னர் தேவையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்கள் செய்து கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.எண். 579/FS/P/2021, நாள் 25.02.2021–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்:–
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர் / செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

<u>நகல்:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்/செயலாளர் – II, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத் திட்டச்
செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/2/2021
பிரிவு அலுவலர்.
28.2.2021